MALAI MALAR 24 NOV 2007

# பசுமை கிராமம் தொடக்கவிழா



ஈஷா யோகா மையம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 2½ கோடி மரங்கள் நடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக குளூர் பஞ்சாயத்தை சேர்ந்த செங்கரபாளையம் கிராமத்தில் மரங்கள் நடும் விழாவும் மாதிரி பசுமை கிராம தொடக்கவிழாவும் நடந்தது. மேலும் செங்கரப்பாளையம் கிராமம் மாதிரி பசுமை கிராமமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

விழாவில் பழனிச்சாமி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மாதிரி பசுமை கிராமத்திட்டத்தினை தொடங்கி வைத்து மரக்கன்றுகள் வழங்கி பேசினார். இதில் மொடக்குறிச்சி ஒன்றியத்தலைவர் நளினி பாலசுப்பிரமணியன், குளூர் பஞ்சாயத்து தலைவர் சரஸ்வதி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் விழா அமைப்பாளர் கிருஷ்ணன் நன்றி கூறினார்.